## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

### TLS 2203 தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**முதலாம் வினா உள்ளிட்டு நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களிற்கான பொருளை உரையாசிரியர்களின் துணை கொண்டு விளக்குக.

(அ) ஆடூஉ அறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப்பாற் சொல் உயர்திணை யவ்வே

(ஆ) வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல்கூடா தம் மரபினவே.

(இ) வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

(ஈ) செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம் குறிப்பினவே திசைச் சொல் கிளவி

(உ) பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர் மறுத்து மொழியினும் பொருள் நிலைதிரியா

(5x5=25 புள்ளிகள்)

02. தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் வேற்றுமை பற்றிக் கூறப்படும் விடயங்களைத் தொகுத்துத் தருக.

(25 புள்ளிகள்)

03. சொற்களின் வகைகள் யாவை என எடுத்துக்கூறி அவற்றின் இயல்புகளை விளக்குக.

(25 புள்ளிகள்)

04. வினைச் சொற்கள் காலம் உணர்த்தும் முறைமை குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

05. (அ) இடைச் சொல்லின் வரைவிலக்கணம் யாது?

(ஆ) அவை எவ்வெவ் வகையாக அமையும்?

(இ) ஓகார உம்மை இடைச்சொற்கள் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்கி அவற்றின் தற்காலப் பொருத்தப்பாடு குறித்துக் கருத்துரைக்குக.

(5+5+15=25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) பெயர்ச் சொற்கள் விளியேற்கும் முறை

(ஆ) சுட்டுப் பெயர்

(இ) உரிச் சொற்கள்

(ஈ) தொகை நிலைத் தொடர்கள்

(12½x2=25 புள்ளிகள்)